**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 376/2019 PW . 2**

**பெயர் : மணிமேகலை** **தந்தை/கணவர் பெயர்: பாலசுப்பிரமணியன்**

**ஊர் :** **தாலுகா:**

**வயது :** **தொழில்:**

**ஜாதி :** **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.10.2025

---

**(1, 2 எதிரிகள் ஆஜரில்லை. 1, 2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**15.10.2025 முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிங்கம்புணரியில் வசிக்கிறேன். ஆலம்பட்டி அரசு பள்ளியில் அட்மினிஸ்ட்டேட்ராக பணிபுரிகிறேன். அ.சா.1 ராஜ்குமார் அவர்களை தெரியாது. சிங்கம்புணரி கிளை, மணப்புரம் பைனான்ஸ் நிறுவனத்தில் 2017 வருடம் 6 மாதம் கணக்காளராக வேலை பார்த்தேன். அப்போது 2வது எதிரி உதவி மேலாளராக அந்த நிறுவனத்தில்இருந்தார். 1வது எதிரியை தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

2. அ.சா.1 எனக்கு தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. நான் வேலை பார்த்தபோது அ.சா.1 மணப்புரம் பைனான்ஸ் நிறுவனத்தில் வட்டார மேலாளராக வேலை பார்த்தார் என்றால் அது பற்றி தெரியாது. 1வது எதிரி மணப்புரம் பைனான்ஸ் நிறுவனத்தில் தணிக்கையாளராக பணிபுரிந்தார் என்றால் அது பற்றி தெரியாது. அ.சா.1 கொடுத்த புகாரில் சிங்கம்புணரி காவல்நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் என்னை விசாரித்த போது 1வது எதிரி 25.01.2014 முதல் ஆடிட்டராகவும், 2வது எதிரி 10.02.2015 முதல் உதவி மேலாளராகவும் மணப்புரம் பைனான்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்தார்கள் என்றும் இந்நிலையில் கிளையின் பெட்டகத்திற்கு இரண்டு சாவிகளில் ஒன்று மேலாளரும், மற்றொன்றை துணை மேலாளராரும் வைத்திருப்பார்கள் என்றும் தணிக்கை நடைபெறும்போது ஆடிட்டரும் உதவிமேலாளரும் பாக்கெட்டுகளை பிரித்து சரிபார்த்து மீண்டும் பாக்கெட்டுகளில் வைத்து பிரிக்கமுடியாத பார்கோடு ஸ்டிக்கர் ஒட்டி உதவி மேலாளரிடம் தரவேண்டும் என்றும் அதன் பின்னர் உதவி மேலாளர் எடையை சரிபார்த்து பெட்டகத்தில் நகைகளை வைக்கவேண்டும் என்றும் இந்நிலையில் 08.06.2016ம் தேதி தணிக்கை பிரிவு அதிகாரி சாட்சிகள் விஷ்ணு சந்திரன், ஜித்தன் ஜெனார்த்தனன், பழனிவேல்ராஜன், பாலகுரு, சதீஸ், ஆகியோர்கள் பெட்டகத்தை தணிக்கை செய்த போது நான்கு பாக்கெட்டுகளில் உள்ள தங்க நகைகளை எடுத்துவிட்டு எதிரிகள் இருவரும் போலி நகைகளை வைத்துள்ளது கண்டுப்பிடிக்கப்பட்டது என்றும் அந்த நான்கு பாக்கெட்டுகளிலும்

28.04.2017ம் தேதி 1வது எதிரி சோதனை செய்து பார்கோடு ஸ்டிக்கரை 2வது எதிரி முன்னிலையில் பிரிக்கமுடியாத நிலையில் ஒட்டி வைக்கப்பட்டிருந்தது என்றும் மேற்படி நான்கு பாக்கெட்டுகளில் வாடிக்கையாளர்கள் ஆசா என்பவருடைய 06.03.2017ம் தேதியிட்ட 20.5 கிராம் எடையுள்ள தங்க செயின் ரூ.41,000/-க்கு வைக்கப்பட்டிருந்த கடனுக்கான நகை என்றும் அதில் 13.07 கிராம் போலி நகை வைக்கப்பட்டிருந்தது என்றும் கருப்பாயி என்பவருடைய 03.03.2017ம் தேதியிட்ட 40 கிராம் எடையுள்ள தங்க செயின் ரூ.80,000/-க்கு வைக்கப்பட்டிருந்த கடனுக்கான நகை என்றும் அதில் 54.30 கிராம் போலி நகை வைக்கப்பட்டிருந்தது என்றும் செல்வராஜ் என்பவருடைய 25.03.2017ம் தேதியிட்ட 15.6 கிராம் எடையுள்ள தங்கநகை ரூ.27,000/-க்கு வைக்கப்பட்டிருந்த கடனுக்கான நகை என்றும் அதில் 18 கிராம் போலி நகை வைக்கப்பட்டிருந்தது என்றும் சாகுல் ஹமீது என்பவருடைய 11.04.2017ம் தேதியிட்ட 25.8 கிராம் எடையுள்ள தங்கமெட்டி இரண்டு, விரல்மோதிரம் இரண்டு ரூ.43,100/-க்கு வைக்கப்பட்டிருந்த கடனுக்கான நகை என்றும் அதில் 18.06 கிராம் போலி நகை வைக்கப்பட்டிருந்தது என்றும் எதிரிகள் இருவரும் ரூ.1,91,100/-க்கு அடகு வைத்த 101.900 கிராம் எடையுள்ள உண்மையான தங்க நகையை திருடி போலி நகைகளை வைத்து சொத்து இழப்பு ஏற்படுத்தினார்கள் என்று வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு அந்த நிறுவனத்தில் வேலை செய்த போது பழக்கமானவர்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் கேட்டுக்கொண்டதற்காக அவர்களை வழக்கிலிருந்து தப்பிக்க வைப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை**.